22nd September 1961]

*1722 *Q*.—SRI S. M. ANNAMALAI: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுவிலக்கு அமுல் நடத்துவதற்காக மத்திய சர்க்கார் மான்யம் தருகின்றார்களா ?

(இ) அப்படியாயின், ஆண்டொன்றுக்கு எவ்வளவு பணம் தருகிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : Has the attention of the Government been drawn to the statement of the Union Minister wherein he has stated that the Union Government would bear 50 per cent of the loss that would be incurred by the introduction of Prohibition in the new States and, if so, whether this Government have applied for compensation in lieu of the loss sustained by them by the introduction of Prohibition?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that this is not a new State which is introducing Prohibition.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த மதுவிலக்குத் திட்டத்தை அமுல் நடத்துவதில் ஏற்கனவே அமுலில் உள்ள மாகாணங்களுக்கு மானியம் கிடையாது, இனிமேல் அமுல் நடத்தப் போகின்ற மாகாணங்களுக்கு மட்டும்தான் மானியம் கொடுக்கப் போவதாக மத்திய சர்க்கார் அறிவித்துள்ளது. அதுகூட நம் மாநில அமைச்சர் மானியம் தேவையில்லை என்று சொல்லியதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையா ? நாம் அதனால் பாதிக்கப்படுவதால், நம்முடைய சர்க்காரும் மத்திய சர்க்காரை பிற மாகாணங்களைப் போல் மானியம் கேட்டு பெறக்கூடாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எங்களுக்கு மானியம் வேண்டும் என்று சொல்லவேண்டிய நிமித்தம் ஏற்படவில்லை. ஆனால் இந்த ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் உருவாவதற்கு முன்னாலேயே மதுவிலக்கு அமுலுக்கு வந்துவிட்டது. இப்போது மதுவிலக்குத் திட்டம் வந்ததிலே நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று அதனாலே நாம் சொல்ல முடியாது. ஏனென்றால் விற்பனை வரி மதுவிலக்குத் திட்டத்தால் அதிகப்பட்டிருக்கிறது. அதாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இது வரையில் மதுவிலக்கு கொண்டு வராத ராஜ்யங்களிலே, அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தை நல்ல முறையிலே நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக இப்போது மதுவிலக்கு கொண்டு வருவதால் நஷ்டமேற்படாத வகையில்தான், இந்த வருமானத்திலே அவர்கள் பாதிக்கப்படுவதால், அதைச் சரிக்கட்டுவதற்காகத்தான் மத்திய அரசாங்கம் அவர்களுக்கு மட்டும் மானியம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இது இந்த ராஜ்யத்திற்கு முற்றிலும் பொருந்தாது.

Post Office for Usilampatti

* 1723 *Q*.—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுகா ஜி. உசிலம்பட்டி பொது மக்கள் தபால் நிலையம் ஏற்படுத்த ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனு என்னவாயிற்று ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Collector of Madurai has stated that as the date of presenting the petition has not been indicated in the question, it is not possible to say whether